# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.523/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.3.சங்கையா** |
| **Father's Name** | : **பந்தன்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.01.2020

மு.வி:

நான் மதுரை சிலைமான் ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் சிலைமான் சங்கையா கோவிலில் பூசாரியாக உள்ளேன். நான் படிக்கவில்லை. எனக்கு கையெழுத்து போடதெரியும். என்னிடம் காண்பிக்கப்படும ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது இல்லை. ஆஜர் எதிரிகளை நான் இதற்கு முன்னால் பார்த்ததில்லை. சிலைமான் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. என் முன்னிலையில் யாரையும் எப்போதும் சிலைமான் காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

16.06.2011 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு சிலைமான் காவல் நிலைய ஆய்வாளர் 1வது எதிரி தங்கப்பாண்டி என்பவரை என் முன்னிலையில் விசாரிக்கும்போது அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் அ.சா.2 இடமிருந்து அவர் கழுத்தில் அணிந்திருந்த அரை பவுன் தாலி மற்றும் அரை பவுன் குண்டு ஆகியவற்றை அத்துக்கொண்டு அ.சா.1 மற்றும் 2யை சத்தம்போட்டால் குத்திவிடுவேன் என்று மற்ற எதிரிகளுடன் சேர்ந்து மிரட்டியது பற்றியும் மற்றும் அதன் அடிப்படையில் 14 மணிக்கு என் முன்னிலையிலும் ராஜா

முன்னிலையிலும் வழக்கு சொத்துக்களை ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து உயிருக்கு அஞ்சி அரசு தரப்பிற்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி:

இல்லை.